## சட்டப் பேரவை விதி 110இன் கீழ், 21–7–2009 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேரவையில் படித்தளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் பின்வரும் அறிக்கையினை அவையில் படித்தளிக்க தங்களின் மேலான அனுமதியினைக் கோருகிறேன்.

கர்நாடகா மற்றும் கேரளாவின் காவேரி நீர் பிடிப்புப் பகுதி களில் பெய்து வரும் கன மழையினால் – மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு வார காலமாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஜூலை 14ஆம் தேதி 60 அடியாக இருந்த நீர் மட்டம், நேற்று (20–7–2009) 81 அடியாக உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணைக்கு சுமாராக வினாடிக்கு 60 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்நிலை தொடரு மானால், இன்னும் இரண்டு வாரங்களில் அணையின் நீர் மட்டம் 90 அடியைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, காவேரி டெல்டா பகுதியில், சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து 7–8–2009 (வெள்ளிக்கிழமை) முதல் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும் என்பதை இப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைக் கருத்திற்கொண்டு காவேரி டெல்டா பகுதி விவசாயிகள் வேளாண் துவக்கப் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.